மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
நத்தம்.

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 17ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆனி திங்கள் 03ம் நாள்

## ஆண்டுபட்டிகை வழக்கு எண்.23/2026

CNR No.TNDG100001202026

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.753/2021

எதிரிகளின் பெயர்கள் –
1. மாயக்கண்ணன் 21/2021 த/பெ.கருப்புச்சாமி
2. பாலக்குரு 21/2021 த/பெ.சின்னு
3. கோபாலகிருஷ்ணன் 28/2021 த/பெ.அழகர்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | 1. மாயக்கண்ணன்21/2021 த/பெ.கருப்புச்சாமி, ராமகவுண்டன்பட்டி, வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். | -- | 16.11.2021 |
| | | | 2. பாலக்குரு 21/2021 த/பெ.சின்னு முல்லையூர், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | -- | 16.11.2021 |
| | | | 3.கோபாலகிருஷ்ணன் 28/2021 த/பெ.அழகர், முல்லையூர், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | -- | 16.11.2021 |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:24 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 30.07.2021 | 08.09.2021 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 06.04.2026ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் மீது பிரிவு 379 இ.த.சவின் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | | | Nil | | |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1 | திரு.ராமச்சந்திரன் (புகார்தாரர்) | 22.05.2026 | 22.05.2026 |
| | | PW2 | திரு.கணேஷ்பாண்டியன் (கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) | 22.05.2026 | 22.05.2026 |
| | | PW3 | திரு.சோலையப்பன் (கேள்வியுற்ற சாட்சி) | 02.06.2026 | 02.06.2026 |
| | | PW4 | திருமதி.அஞ்சலிதேவி (பார்வை மகஜர் சாட்சி) | 02.06.2026 | 02.06.2026 |
| | | PW5 | திரு.ராமன் (பார்வை மகஜர் சாட்சி) | 02.06.2026 | 02.06.2026 |
| | | PW6 | திரு.மலைச்சாமி (புலன் விசாரணை அதிகாரி) | 11.06.2026 | 11.06.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 16.06.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:28 +0530

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 30.07.2021ம் தேதி 14.00 மணிக்கு நத்தம் காவல் சரகம் முளையூரில் உள்ள சோலையப்பன் என்பவரின் தோட்டம் பகுதியில் எதிரிகள் TN 57 BV 6142 என்ற JCB வாகனம் மூலம் TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற இரண்டு டிராக்டர்களின் டெய்லர்களில் தலா 1 யூனிட் அளவுள்ள கிணற்று கிராவல் மண்ணை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் திருட்டுத்தனமாக அள்ளிய குற்றத்திற்காக எதிரிகள் மீது பிரிவு 379 இ.த.சவின் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, எதிரிகள் மீதான பிரிவு 379 இ.த.சன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை பிரிவு 248(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | இவ்வழக்கு சொத்தான RPR No.39/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனங்களை Crl.M.P.No.2818/2021 Dated 09.11.2021ம் தேதிய உத்தரவின் அடிப்படையில் வாகன உரிமையாளர்கள் இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுவிட்டதால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரவர்களே வைத்துக்கொள்ளவும், அவர்கள் எழுதிக்கொடுத்த பிணைமுறி ரத்துசெய்யவும் உத்தரவிடப்படுகிறது. அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான புகைப்படங்கள் நீதிமன்ற கோப்பில் வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. |

**இவ்வழக்கு 30.01.2026ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இதில் இறுதியாக 15.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் திரு.மூர்த்தி வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற**

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:34 +0530

விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது சட்டப்பிரிவுக 379 இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் கீழ் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) **இறுதியறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கு :–**

கடந்த 30.07.2021ம் தேதி 14.00 மணிக்கு நத்தம் காவல் சரகம் முளையூரில் உள்ள சோலையப்பன் என்பவரின் தோட்டம் பகுதியில் எதிரிகள் TN 57 BV 6142 என்ற JCB வாகனம் மூலம் TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற இரண்டு டிராக்டர்களின் டெய்லர்களில் தலா 1 யூனிட் அளவுள்ள கிணற்று கிராவல் மண்ணை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் திருட்டுத்தனமாக அள்ளியதாக நத்தம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 379 இ.த.சவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 23/2026 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.17 17:06:39 +0530

ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் 16.03.2026ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) எதிரிகளுக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 06.04.2026ம் தேதியன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 379 இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 240 கு.வி.மு.ச–வின் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை. எ.த.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –</u>**

6.1) கடந்த 30.07.2021ம் தேதி 14.00 மணிக்கு நத்தம் காவல் சரகம் முளையூரில் உள்ள சோலையப்பன் என்பவரின் தோட்டம் பகுதியில் எதிரிகள் TN 57 BV 6142 என்ற JCB வாகனம் மூலம் TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற இரண்டு டிராக்டர்களின் டெய்லர்களில் தலா 1

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:44 +0530

யூனிட் அளவுள்ள கிணற்று கிராவல் மண்ணை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் திருட்டுத்தனமாக அள்ளிய குற்றத்திற்காக நத்தம் காவல் நிலைய தலைமைக்காவலர் திரு.ராமச்சந்திரன் என்பவர் அ.த.சா.ஆ.1 புகார் மனுவை அ.சா.6 சார்பு ஆய்வாளர் மலைச்சாமி என்பவரிடம் கொடுத்துள்ளார்.

6.2) மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.6 சார்பு ஆய்வாளர் மலைச்சாமி நத்தம் காவல் நிலைய கு.எண். 753/2021 சட்டப்பிரிவு 379 இதச. வாக வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார், மேற்படி புகார் மனுவுடன் ராமச்சந்திரன் காவல் நிலையத்தில் ஒப்படைத்த மணல் திருட்டு சம்பந்தப்பட்ட TN 57 BV 6142 என்ற JCB, TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற பதிவெண்கள் கொண்ட டிரைலருடன் கூடிய இரண்டு டிராக்டர்களை அன்றையதினம் 16.30 மணிக்கு நத்தம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகர் மற்றும் 2ம் நிலைக்காவலர் திரு.கணேஷ்பாண்டியன் அவர்கள் முன்னிலையிலும் அ.த.சா.ஆ.5 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அன்றைய தினமே பிற்பகல் 17.00 மணிக்கு சம்பவ இடமான முளையூரிலுள்ள சோலையப்பன் தோட்டத்தின் அருகில் வைத்து சாட்சிகள் அ.சா.5 ராமன் மற்றும் அ.சா.4 அஞ்சலிதேவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.6 மாதிரி வரைபடம் மற்றும் அ.த.சா.ஆ.7 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் ராமச்சந்திரன், பிரபாகர், கணேஷ்பாண்டியன்,

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:48 +0530

சோலையப்பன், அஞ்சலிதேவி மற்றும் ராமன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6.3) அதன் பின்னர் அன்றையதினமே 16.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் மாயக்கண்ணன், பாலகுரு, கோபாலகிருஷ்ணன் ஆகிய மூவரையும் நத்தம் காவல்நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தும், தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் 31.07.2021ம் தேதி முளையூர் கிராம நிர்வாக அலுவலர் பட்டியல் சாட்சி 7 சுரேஷ் என்பவரை விசாரித்து சம்பவ இடத்தின் புல எண் குறித்து **அ.த.சா.ஆ.8 கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த** சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு சொத்துக்களான TN 57 BV 6142 என்ற JCB, TN 72 W 7555 மற்றும் TN 57 J 4253 என்ற பதிவெண்கள் கொண்ட டிரைலருடன் கூடிய இரண்டு டிராக்டர்களை அ.த.சா.ஆ.9 படிவம்–91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் மனுவின்பேரில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனங்களின் உரிமையாளர்களான 1) லெட்சுமணன் 2) கோபாலகிருஷ்ணன் (3) வெங்கட பாலகுரு ஆகியோர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்து அ.த.சா.ஆ.10 எதிரிகள் நீக்கல் அறிக்கை தயார் செய்துள்ளார். இத்துடன் இவ்வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 08.09.2021ம் தேதி சட்டப்பிரிவு 379 இ.தச.வின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:54 +0530

7) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்கள்.

8) எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் எதிரிகள் குற்றமற்றவர் என்றும், வழக்கு சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு சாட்சிகள் என்றும், மணலை எடுத்ததற்கான எந்தவொரு ஆவணமும் அரசு தரப்பில் இல்லை என்றும், வழக்கில் சொல்லியுள்ளதுபோல் குற்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் புலனாகியுள்ளதாகவும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

9) எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:06:57 +0530

10) **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

**11) <u>தீர்வு</u>**

11.1) எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள முக்கிய சாட்சிகள் அனைவரும் காவல் துறையை சார்ந்த நபர்கள் என்றும், சம்பவம் குறித்து தனிநபர் விசாரணை செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் கிணற்று கிராவல் மண் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனால் தான் மேற்படி மண் என்ன ஆனது என்பதற்கான ஆவணம் தாக்கல் இல்லை என்றும், தோட்ட உரிமையாளர் தனது இடத்தில் எதிரிகள் மண் அள்ளி திருட்ட முயற்சித்ததாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வாகனங்கள் மாந்தோட்டத்திற்குள் பிடிக்கப்பட்டதா அல்லது பிரதான சாலையில் பிடிக்கப்பட்டதா என்பதில் பெரும் முரண்பாடு உள்ளது என்றும், எனவே, சம்பவம் முற்றிலும் பொய்யான புனையப்பட்ட வழக்கு என்றும், வழக்கில் சொல்லப்படுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் வாதிட்டார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:03 +0530

11.2) சட்ட விதிகளின்படி, சாட்சிகள் காவல் துறையைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவே அவர்களின் சாட்சியத்தை நிராகரிக்க முடியாது. மற்ற சாட்சிகளைப் போலவே இவர்களின் சாட்சியமும் பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால், அவர்களின் சாட்சியத்தில் நம்பகத்தன்மையும், முரண்பாடுகளற்ற தன்மையும் இருக்க வேண்டியது அவசியம். அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் பரிசீலனை செய்த வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 30.07.2021ம் தேதி நத்தம் முளையூர் பகுதியில் மணல் திருட்டு சம்பந்தமாக தகவல் கிடைத்ததன் அடிப்படையில் நானும், என்னுடன் பணி புரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் என்பவரும் மதியம் சுமார் 2.00 மணியளவில் மேற்படி பகுதியில் சோலையப்பன் தோட்டம் அருகே சென்றபோது TN 57 BV 6142 என்ற பதிவெண்கொண்ட JCB மற்றும் 1) TN 72 W 7555 மற்றும் 2) TN 57 J 4253 என்ற பதிவெண்கள் கொண்ட இரண்டு டிராக்டர்களில் கிராவல் மண்ணை லோடு ஏற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களை நான் அழைத்து விசாரித்தபோது JCB டிரைவர் பெயர் மாயக்கண்ணன், TN 72 W 7555 டிராக்டர் டிரைவர் பெயர் பாலகுரு என்றும், மற்றொரு TN 57 J 4253 டிராக்டர் டிரைவர் பெயர் கோபாலகிருஷ்ணன் என்றும் சொன்னவர்களை மேலும் விசாரிக்க அரசு அனுமதியின்றி கிணற்று கிராவல் மண் எடுப்பதாக கூறினார்கள். எனவே அவர்களை வாகனங்கள் மற்றும் கிராவல் மண்ணுடன் காவல் நிலையம் அழைத்து சென்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி சார்பு ஆய்வாளரிடம் நான் புகார் மனு கொடுத்தேன்" என்று தெரிவித்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.17 17:07:07 +0530

11.3) அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் " கிணற்று கிராவல் மண் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்றால் தோட்டத்தில் உள்ள கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட மண் ஆனது குவியலாக அருகே குவிக்கப்பட்டிருந்தது அதிலிருந்து மண் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிணற்று மண் ஆனது கிணற்றை சுத்தப்படுத்தி விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஆழப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோலையப்பன் தோட்டத்திலிருந்து முளையூருக்கு வரும் மண் பாதையில் வாகனங்கள் பிடிக்கப்பட்டது. புகார் மனு மற்றும் சார்பு ஆய்வாளர் விசாரணை மற்றும் முதல் விசாரணையில் முளையூருக்கு வரும் மண் பாதையில் வாகனங்கள் பிடிக்கப்பட்டது என்ற விபரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்தின் வாயிலாக சோலையப்பன் தோட்டம் அருகில் உள்ள பிரதான சாலையில் வைத்து வாகனங்களை பிடித்ததாகவும், விசாரணையில் சோலையப்பன் என்பவரின் தோட்டத்தில் இருந்து மணல் எடுத்து வருவதாக எதிரிகள் விசாரணையில் சொல்லியதாக நீதிமன்ற விசாரணையில் தெரிவித்துள்ளார். ஆனால் அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் மணல் அள்ளிக்கொண்டிருந்தவர்கள் போலிஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சார்பு ஆய்வாளர் விசாரணையிலும் புகார் மனுவில் கண்ட விபரத்தை தான் தெரிவித்துள்ளார். இதன்மூலம் வாகனங்களை பிரதான சாலையில் வைத்து பிடிக்கப்பட்டதா அல்லது மாந்தோட்டத்திற்குள் வைத்து பிடிக்கப்பட்டதா என்பது குறித்து எதிரிகள் தரப்பில் எழுப்பப்பட்டது போல் சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:12 +0530

11.4) அரசு தரப்பில் வழக்கு சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றியது தொடர்பாக அத்தாட்சியில் கண்ட சாட்சி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "நான் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் பிரபாகர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தில் கிணற்று கிராவல் மண் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மண்ணை கொட்டி விட்டு வாகனத்தில் வரும்போது பிடிக்கப்பட்டுள்ளார்கள். வழக்குக் கோப்பில் எதிரிகள் மண்ணைக் கொட்டி விட்டு வாகனத்தில் வந்ததாக இல்லை என்றாலும், மண் எதுவும் வாகனத்தில் எடுத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் மண்ணின் அளவோ, மண்ணின் மதிப்பீடு குறித்த விபரங்களோ தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான், வாகனங்கள் மட்டும் தான் கைப்பற்றப்பட்டது. படிவம் 91 இல் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு எதிரிகள் மண்ணை கொட்டி விட்டு வாகனத்தில் வரும்போது பிடிக்கப்பட்டுள்ளார்கள் தெரிவித்துள்ளார். வழக்கில் அவ்வாறு எங்குமே தெரிவிக்கப்படவில்லை. குற்ற இறுதி அறிக்கையிலும் சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் மணல் அளியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி முரண்பாடானது அரசு தரப்பு வழக்கின் அடித்தளத்தையே தகர்க்கிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.17 17:07:15 +0530

11.5) புலன்விசாரணை அதிகாரி சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.6 வரைபடம் மற்றும் அ.த.சா.ஆ.7 பார்வைமகஜர் –யை அ.சா.4 அஞ்சலிதேவி மற்றும் அ.சா.5 ராமன் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்ததாக குறிப்பிடும் நிலையில் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 அஞ்சலிதேவி தனது சாட்சியத்தில் "தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் நான் எங்கள் வீட்டிலிருந்து எங்கள் ஊரிலுள்ள கடைக்கு வந்தபோது போலீசார் வந்து சம்பவ இடத்திற்கு வந்ததற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன்" என்று கூறி சாட்சியமளித்துள்ளார். பார்வைமகஜரில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான அ.சா.5 ராமன் தனது சாட்சியத்தில் "தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. நான் எனது தலைப்பு எழுத்தை மா என்று தமிழில் தான் செய்வேன். M என்று ஆங்கிலத்தில் எழுதமாட்டேன். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கியதே இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 சோலையப்பன் தனது சாட்சியத்தில் "ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது ஊர்க்காரரர்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி அவர் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார். மேற்படி அ.சா.3 ஆன சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் தான் மண் அள்ளப்பட்டதாக அரசு தரப்பு வழக்கு உள்ளது. அவர் தனது தோட்டத்தில் கிணற்று கிராவல் மண்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.17 17:07:20 +0530

அள்ளப்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. இது வழக்கிற்கு பின்னடைவாகவே உள்ளது.

11.6) எதிரிகள் தரப்பில் அத்தாட்சியில் மணல் கைப்பற்றியதாகவும், கைப்பற்றிய மணல் யூனிட்டின் மதிப்பு பற்றியும் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றும், மணலின் மதிப்பு தெரிவிக்காததாலும், அத்தாட்சியில் காவல்துறையினரே கையொப்பம் செய்து இருப்பதாலும், அது நம்பகத்தன்மை அற்ற ஆவணம் என்று எடுத்துரைக்கப்பட்டது. அதே போல் அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் பெறப்படவில்லை என்பதால் மேற்படி அத்தாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்ற எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில் எதிரியிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்பதால் மட்டும் அந்த ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்பது கிடையாது. ஏனெனில் எதிரி போலீசார் வசம் இருப்பதால் அவர் கையொப்பம் செய்தாலும், செய்யவில்லை என்றாலும் அது அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாக இல்லை. ஆனால் மண் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்காதது வழக்கிற்கு பாதகமாகவே உள்ளது. அரசு தரப்பில் தெரிவிக்கப்படுவது போல் மண்ணை திருடும் அல்லது கடத்தும் எண்ணத்தில் கிணற்று கிராவல் மண் அள்ளப்பட்டுள்ளதா என்பதை காண வேண்டியதுள்ளது.

11.7) அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் "பொதுவாக விவசாய பயன்பாட்டிற்காக கிணற்றிலிருந்து தூர்வாரி எடுக்கப்பட்ட மண்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:25 +0530

ஆனது, மண்ணை குவித்து வைக்காமல் அதே இடத்தில் நிலத்தை சீர் செய்வதற்கும், சமப்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளது என்றால் சரிதான். கிணற்று கிராவல் மண்ணானது டிராக்டருடன் சேர்த்து காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன் அதற்குப் பிறகு பொதுவாக வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்ணை ஒப்படைப்பது வழக்கம் சார்பு ஆய்வாளர் ஒப்படைத்திருப்பார். நான் சொல்வது போல் மண் ஆனது காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்பதால் தான் அது அத்தாட்சியில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும், அதனால் நான் சொன்ன விதத்தில் மண்ணை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல" என்று தெரிவித்துள்ளார்.

11.8) மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "புகார் மனு மற்றும் சார்பு ஆய்வாளர் விசாரணையில் எந்த டிராக்டரை, எந்த எதிரி ஓட்டி வந்தார் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு யூனிட் கிராவல் மண் ஆனது எவ்வளவு எடை இருக்கும் என்றால் தெரியாது. எதன் அடிப்படையில் ஒரு யூனிட் கிராவல் மண் என்று சொல்கிறேன் என்றால் ட்ரெய்லரின் கொள்ளளவு அளவை வைத்து சொல்கிறேன். எந்த வகையான ட்ரெய்லர் என்றால் பெரிய ட்ரெய்லர் ஆகும். ஒரு யூனிட் கொள்ளளவு எவ்வளவு என்று தெரியாது என்றால் சரிதான். ஒரு யூனிட் கொள்ளளவு எடை குறித்து தெரியாமலேயே தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல" என சாட்சியமளித்துள்ளார். ஒரு யூனிட் மண்ணின் கொள்ளளவு அல்லது எடை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:28 +0530

குறித்து தமக்குத் தெரியாது என்று அ.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். எதிரிகள் தரப்பில் ஒரு யூனிட் மணல் என்பது முறையாக நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், கொள்ளவில் தெரிவித்தால் 4 யூனிட் வரை மண் எடுக்க வாய்ப்பு உள்ள நிலையில் இரு டிராக்டரிலும் தலா 1 யூனிட் மண் எடுக்கப்பட்டதாக தெரிவிப்பது ஏற்புடையதல்ல என்றும் எடுத்துரைக்கப்பட்டது. எதிரிகள் மணலை எடுத்து வெளியிடங்களுக்கு விற்க முயற்சி செய்தார்களா என்பதும், யாருக்கு விற்பனை செய்ய முயன்றார்கள் என்பதும் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று எதிரிகள் தரப்பில் வாதங்கள் முன்னிடப்பட்டது.

11.9) கூடுதல் சாட்சி அ.சா.6 தனது குறுக்குவிசாரணையில் "அ.சா.1 கொடுத்த புகார் மனு மற்றும் புலன் விசாரணை அதிகாரி திரு.சேகர் அவர்களின் விசாரணையிலும் சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் உள்ள கிணற்று கிராவல் மண் வெட்டி எடுக்கப்பட்டதாக தான் தெரிய வருகிறது என்றால் சரிதான். கிணற்று கிராவல் மண் ஆனது எந்த பகுதியில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது என்ற விபரம் சேகர் அவர்கள் விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். பொதுவாக விவசாய நோக்கங்களுக்காக கிணற்றில் உள்ள மண் ஆனது தூர்வாரப்பட்டு வெட்டி எடுக்கப்படும் என்றால் சரிதான். பொதுவாக நல்ல நோக்கங்களுக்காக கிணற்று மண் எடுக்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். எந்தெந்த எதிரி, எந்தெந்த டிராக்டரை பயன்படுத்தி வந்தார்கள் என்று புகாரிலும், விசாரணையிலும் தெரிய வரவில்லை என்றால் சரிதான். சோலையப்பன் என்பவரது தோட்டத்தின் அமைப்பு குறித்து

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:34 +0530

அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சோலையப்பனின் தோட்டத்திற்குள் வைத்து தான் வழக்கு சொத்துக்கள் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம்–9ல் கிராவல் மண்ணின் மதிப்பு குறித்து தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்" என கூறியுள்ளார்.

11.10) மேலும் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் "கிராவல் மண் என்ன ஆனது என்று விசாரணையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் அளித்த சான்றிதழில் லேட்.மாயழகனம்பலம் என்பவருக்கு சொந்தமான பட்டா எண்.594–ல் கண்ட புல எண்.248/1A என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வருவாய்த் துறையினர் அவர்களால் மண் எடுத்தது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வருவாய் துறையினருக்கு மண் எடுத்தது சம்பந்தமாக தகவல் தெரிந்திருந்தும் மேற்படி துறையினரால் நடவடிக்கை எடுக்கப்படாமல் போலீசாரால் மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் கிராவல் மண் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.... இவ்வழக்கில் வாகனங்களின் உரிமையாளர்கள் வழக்கிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் நீக்கல் அறிக்கையில் சோலையப்பன் என்பவரது தோட்டத்தில் ஆங்காங்கே கொட்டி கிடந்த கிணற்று கிராவல் மண்ணை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:38 +0530

ஒழுங்குப்படுத்தி வைப்பதற்காக வாடகைக்கு செல்வதாக சொன்னதாக தெரிவித்து தான் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரிகள் நேர்மையற்ற முறையில் கிராவல் மண்ணை வெளியே எடுத்து வரவில்லை என்றாலும், சார்பு ஆய்வாளர் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல" என்று தெரிவித்துள்ளார்.

11.11) குற்றவியல் வழக்குகளில் அரசு தரப்பு, எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும். ஏதேனும் நியாயமான சந்தேகம் எழும் பட்சத்தில், அதன் பலன் எதிரிக்கே சாதகமாக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் கிணற்றை விவசாய நீர்ப்பாசனத்திற்காக ஆழப்படுத்த தூர்வாரிய மண்ணை, நிலத்தை சமப்படுத்தவே பயன்படுத்தியதாக எதிரிகள் தரப்பில் கூறப்படும் வாதம் ஏற்புடையதாகவே உள்ளது. வழக்கின் முக்கிய சொத்தான "கிணற்று கிராவல் மண்" கைப்பற்றப்பட்டதற்கான எந்தவொரு சட்டப்பூர்வ ஆதாரமும், ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையிலும் கிராவல் மண் மதிப்பு குறித்து தெரிவிக்கப்படவில்லை. நிலத்தின் உரிமையாளரான அ.சா.3 குற்றத்தை மறுத்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால், இங்கு திருட்டு என்ற குற்றத்திற்கான கூறுகள் பூர்த்தியாகவில்லை. வாகனங்கள் தோட்டத்திற்குள் பிடிக்கப்பட்டதா அல்லது பிரதான சாலையில் வைத்து பிடிக்கப்பட்டதா என்பதில் சந்தேகத்திற்குரிய முரண்பாடு எழுந்துள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:43 +0530

அரசு தரப்பு சாட்சிகளில் கண்ட முக்கிய குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகள் காரணமாகவும், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக, எதிரிகள் மீதான பிரிவு 379 இ.த.சவின் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.**

இவ்வழக்கு சொத்தான RPR No.39/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனங்களை Crl.M.P.No.2818/2021 Dated 09.11.2021ம் தேதிய உத்தரவின் அடிப்படையில் வாகன உரிமையாளர்கள் இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுவிட்டதால், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரவர்களே வைத்துக்கொள்ளவும், அவர்கள் எழுதிக்கொடுத்த பிணைமுறி ரத்துசெய்யவும் உத்தரவிடப்படுகிறது. அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையிலான புகைப்படங்கள் நீதிமன்ற கோப்பில் வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.17 17:07:47 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 17.06.2026–ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | 22.05.2026 | திரு.ராமச்சந்திரன் (புகார்தாரர்) |
| 2. | அ.சா.2 | 22.05.2026 | திரு.கணேஷ்பாண்டியன் (கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| 3. | அ.சா.3 | 02.06.2026 | திரு.சோலையப்பன் (கேள்வியுற்ற சாட்சி) |
| 4. | அ.சா.4 | 02.06.2026 | திருமதி.அஞ்சலிதேவி (பார்வை மகஜர் சாட்சி) |
| 5. | அ.சா.5 | 02.06.2026 | திரு.ராமன் (பார்வை மகஜர் சாட்சி) |
| 6. | அ.சா.6 | 11.06.2026 | திரு.மலைச்சாமி (கூடுதல் சாட்சி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வ. எண் | சான்றாவணங்கள் | தேதி | சான்றாவணங்களின் விபரங்கள் |
|---|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 30.07.2021 | புகார் மனு |
| 2. | அ.த.சா.ஆ.2 / அ.சா.2 | 30.07.2021 | அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| 3. | அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 30.07.2021 | பார்வைமகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | அ.த.சா.ஆ.4 / அ.சா.6 | 30.07.2021 | முதல்தகவல்அறிக்கை |
| 5. | அ.த.சா.ஆ.5 / அ.சா.6 | 30.07.2021 | அத்தாட்சி |
| 6. | அ.த.சா.ஆ.6 / அ.சா.6 | 30.07.2021 | வரைபடம் |
| 7. | அ.த.சா.ஆ.7 / அ.சா.6 | 30.07.2021 | பார்வைமகஜர் |
| 8. | அ.த.சா.ஆ.8 / அ.சா.6 | 31.07.2021 | கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழ் |
| 9. | அ.த.சா.ஆ.9 / அ.சா.6 | 30.07.2021 | படிவம் – 91 |
| 10. | அ.த.சா.ஆ.10 / அ.சா.6 | 08.09.2021 | எதிரிகள் நீக்கல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

1. அ.சா.பொ.1 – TN 57 BV 6142 என்ற பதிவெண் கொண்ட JCB வாகனம் (புகைப்படம் )

2. அ.சா.பொ.2 – TN 57 J 4253 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் (புகைப்படம் )

3. அ.சா.பொ.3 – TN 72 W 7555 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் (புகைப்படம் )

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள்** : **இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்று பொருள்கள்** : **இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்றாவணம்** : **இல்லை**

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:07:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**<u>குறிப்பு:</u>**

1. இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க வந்த எந்த சாட்சிகளும் விசாரிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

3. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.17 17:08:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.